**கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே - ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாய பூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின்போது பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பின்வரும் பெறுமதிகள் கணக்கிலிடப்படவில்லை.

- (i) சபைக்குச் சொந்தமான சகல காணிகளதும் கட்டிடங்களதும் பெறுமதி
- (ii) கணக்குத் தயாரிப்பிற்கான கட்டணமாகிய ரூபா 97,500
- (iii) நடப்பாண்டின் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதியேற்பாடு

(ஆ) ஆயுர்வேத ஔடதக் கொள்வனவுக்கான ரூபா 761,050 இருமுறை கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) பெறுமதிசேர் வரி ரூபா 1,592,300 கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் பொருட்டுப் பெறப்பட்ட தீர்வை வரியாகிய ரூபா 8,338,941 தீர்வை வரி முற்கொடுப்பனவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியக் கடன் மீதி ரூபா 305,618 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் பொருட்டுப் பெறப்பட்ட முத்திரைக் கட்டணமாகிய ரூபா 1,522,335 திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாது பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருவாய்க் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) கொடுப்பனவு செய்ய வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான ரூபா 343,122 பெற வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளளிப்புச் செய்யப்படாத சம்பளமாகிய ரூபா 20,771,523 மற்றும் அங்கத்தவர்களுக்கான படியாகிய ரூபா 630,000 என்பன பெற வேண்டிய வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கணக்குகளின் பிரகாரம் 11 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 355,773 ஆகும். அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேடுகள் / அறிக்கைகள் என்பவற்றின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 297,892,073 ஆகும்.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

(அ) பெற வேண்டிய 02 கணக்கீட்டு விடயங்களதும் ஒரு கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கீட்டு விடயத்தினதும் கூட்டுத் தொகையாகிய ரூபா 714,014 மீதியானது நெடுங்காலமாகத் தீர்த்து வைக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தன.

(ஆ) ஊழியர் கடன் மீதியாகிய ரூபா 10,376,697 சேவை விலகிய, சேவை இடை நிறுத்தம் செய்யப்பட்ட, இடமாற்றத்திற்குள்ளான, ஓய்வு பெற்ற, மரணமடைந்த 13 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 412,924 கூட்டுத்தொகையுடைய மீதியையும் உள்ளடக்கியிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 56,315,059 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுப்பேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 89,048,114 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 109,999,705 ஆகும்.

**2.2 வங்கிக் கணக்குகள்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றில் 03 ஆண்டுகளுக்கு முன்னர் வைப்பிலிடப்பட்டு தேறாது இருக்கும் ரூபா 16,669 பெறுமதியுடைய 03 காசோலைகள், உறுதிப்படுத்தப்படாத பெறுமதியாகிய ரூபா

25,215 இன் கூட்டல் தொகை மற்றும் ரூபா 56,239 பெறுமதியான கழித்தல் என்பன சீராக்கலாகக் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன.

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருவாய்க்கான விடயம் | 2016 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | 2016 பட்டியலிடல் | உள்ளவாறான அறவீடு | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | 2015 பட்டியலிடல் | உள்ளவாறான அறவீடு | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | |
| தீர்வையும் வரியும் | 55,467,503 | 43,663,465 | 45,852,897 | 53,278,074 | 54,878,212 | 64,127,053 | 49,037,228 | 69,968,038 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 242,715 | 666,060 | 357,710 | 551,065 | 485,430 | 617,860 | 626,960 | 476,330 |
| குத்தகை வாடகை | 5,221,055 | 3,157,200 | 4,425,482 | 3,952,774 | 7,119,965 | 9,330,600 | 6,177,252 | 10,273,310 |
| வியாபார வரி | 115,540 | 1,864,140 | 1,060,520 | 919,160 | 231,080 | 1,065,581 | 1,177,811 | 118,850 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

(அ) தீர்வை வரியானது 2015 ஆம் ஆண்டை விட ரூபா 10,729,292 குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன், அது 2015 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய ரூபா 69,968,038 நிலுவை மீதியைக் கணிப்பிடும்போது ஏற்பட்ட தவறுகளைச் சீராக்குவதற்கு நாட்குறிப்பின் மூலம் சீராக்கல் செய்யப்பட்ட ரூபா 12,222,967 இன் மூலம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின்போது முன்னைய ஆண்டிற்கான தீர்வை வரி நிலுவையில் 36 சதவீதமும் நடப்பாண்டின் பட்டியலிடப்பட்ட தீர்வை வரியில் 59 சதவீதமும் அறவிடப்பட்டிருந்தன.

### 2.3.3 கடை வாடகை

(அ) கொட்டிகாவத்த பொதுச் சந்தையில் உள்ள 28 கடைகளில் மீளாய்வாண்டின் இறுதியளவில் மொத்த வாடகை மீதியாகிய ரூபா 904,460 அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றுள் 2016 ஆம் ஆண்டிற்கான வாடகை எதனையும் செலுத்தாத 11 கடைகள் இருந்தன. அவற்றின் வாடகை நிலுவை ரூபா 623,450 ஆகும்.

(ஆ) கொட்டிகாவத்த உப அலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் அம்பதலே சந்தியில் உள்ள 12 விற்பனைக் கூடங்களிலிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 250,282 வாடகை நிலுவையாகவும் தண்டப்பணத் தொகை ரூபா 20,380 ஆகவுமிருந்தது.

(இ) பாரொன் ஜயதிலக மேல் மாடி விற்பனைக் கூட விரிவுரை மண்டபத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் அறவிடப்பட வேண்டிய திரண்ட வாடகை நிலுவை ரூபா 326,775 ஆகும். அதனை அறவிடுவதற்குச் சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

### 2.3.4 வீட்டு வாடகை

கொட்டிகாவத்த வீடமைப்புத் தொகுதி மற்றும் கொட்டிகாவத்த மேல் மாடி வீட்டுத் தொகுதியில் அமைந்துள்ள 38 வீடுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த வீட்டு வாடகை நிலுவை ரூபா 1,388,728 ஆகும். அது மொத்த வாடகை நிலுவையில் 92 சதவீதமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

3.1.1 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்கத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொருட்டு வங்கிக் கணக்கொன்றை பேணி, போதியளவு தொகை சேகரிக்கப்படுமிடத்து உள்ளூராட்சி நிறுவனம் இனங்கண்டு கொண்டுள்ள செயற்திட்டம் ஒன்றிற்கான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையுடன் பணத்தை மீளப் பெறுவதற்கான அங்கீகாரத்தைக் கோரி, தேவையான செயற்திட்டத்தைச் சபை அமுலாக்கக் கூடியதாகவிருந்தபோதும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கில் ரூபா 1,950,704 அநேக ஆண்டுகளாக பயனற்றிருந்தது.

### 3.1.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

செயலற்றவாறிருக்கும் ரூபா 3,200,000 பெறுமதியான 04 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கும் ரூபா 500,000 பெறுமதியுடைய பழுதுபார்ப்பதற்கு முடியாத நிலையில் உள்ள டிறக்டர் ஒன்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.1.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் சொத்துக்களுக்குக்குரிய மின் கட்டணம் மற்றும் நீர்க் கட்டணம் என்பவற்றைக் கொடுப்பனவு செய்கையில் முறையே ரூபா 8,177, ரூபா 2,153 எனக் கால தாமதத்திற்கான கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.1.4 ஒப்பந்த நிர்வாகம்

பண்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத்திட்டம், கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன அடிப்படை வசதிகள் என்பவற்றைக் கட்டியெழுப்புதல் மற்றும்

சபை நிதியம் போன்ற பல்வகை நிதியேற்பாட்டின் வாயிலாக ரூபா 62,185,831 கிரயத்துடனான 89 வேலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,531,211 பெறுமதியான 02 வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.

### 3.1.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படும் சகல கழிவுப் பொருட்களின் மூலம் அழிவுறும் கழிவுப் பொருட்கள் கொம்போஸ்ட் உற்பத்திக்காகப் பயன்படுத்துவதும் அழிவடையாத கழிவுப் பொருட்கள் பிரதேசத்தில் உள்ள பாழ் நிலத்தில் போடப்படுவதும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கழிவுப் பொருள் கூடத்தில் உள்ள கழிவுப் பொருட்களை துகள்களாக மாற்றுவதற்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சேன் டோசரின் பொருட்டு 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 5,674,032 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறானதொரு வாகனத்தைக் கொள்வனவு செய்வதில் சபை நாட்டம் கொண்டிருக்கவில்லை.

(இ) 2008 ஜீலை 30 ஆந் திகதிய 1560/6 ஆம் இலக்க விசேட வர்த்தமானியின் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்ட மேல் மாகாணத்தின் 2008 ஆம் ஆண்டினது 01 ஆம் இலக்க நகரக் கழிவுப்பொருள் முகாமைத்துவ விதிகளின் 6 ஆம் அத்தியாயத்தினது 59 ஆம் பந்தியின் பிரகாரம் சகல உள்ளூராட்சி நிறுவனங்களும் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் பங்களிப்புடன் கார்பனிக் கழிவுப் பொருளுக்காக ஜீவவாயு கொம்போஸ்ட் அல்லது வேறேதாவது செயல்முறைத் தொழில்நுட்ப விதிமுறைகளின் மூலம் ஒழுங்கமைப்பை மேற்கொள்ள வேண்டுவதுடன், சபை கொம்போஸ்ட் கூடத்தைப் பேணி வந்தபோதும் அது அதிகாரத்திற்குட்பட்ட ஒட்டுமொத்த பிரதேசத்தின் அழிவுறும் கழிவுப் பொருட்களை கொம்போஸ்ட் ஆக்குவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) நகர திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ விதிகளின் 2 ஆம் அத்தியாயத்தினது 18(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரிக்குப் புறம்பாக, வீட்டுக்கு வீடு கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கான செலவை ஈடுசெய்வதற்காக பிரதான குடியிருப்பாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியதுடன் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 4.3 பொருட் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகினறது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) கையிருப்புக் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு